


**16. 08. 2025**

தலைப்பு செய்திகள்

- சுயசார்பு பாரதத்தை உருவாக்குவதில் அடல்பிஹாரி வாஜ்பேயின் அர்ப்பணிப்புமிகு சேவை நமக்கு உத்வேகம் அளிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி பக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கொண்டாடப்படுகிறது.
- அமெரிக்காவின் வரி தொடர்பான விவகாரங்களில் மத்திய அரசுக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- திண்டுக்கல்லில் தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமிக்கு தொடர்புடைய நான்கு பகுதிகளில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.
- அமெரிக்கா சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரித்விக் போலிப்பள்ளி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

வாஜ்பய்

முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயின் 7-வது நினைவுதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் அன்னாரது நினைவிடமான சதைவ் அடலில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத்சிங், திரு. ஜே.பி.நட்டா, திரு.கிரண் ரிஜுஜு உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

சிறப்பு பிரார்த்தனைகளும் அங்கு நடைபெற்றன.

இந்நாளையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் **சுயசார்பு பாரதத்தை உருவாக்குவதில் அடல்பிஹாரி** வாஜ்பேயின் அர்ப்பணிப்புமிகு சேவை நமக்கு உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று முறை பிரதமராக பதவிவகித்த வாஜ்பேயி கிராமப்புற மக்களின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்தும் வகையில், பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா, அந்தியோதயா அன்னயோஜனா உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர்.

கடந்த 2015-ம் ஆண்டு நாட்டின் உயரிய பாரத் ரத்னா விருது அவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

## பிரதமர்

**பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில்** 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நாளை தொடங்கிவைக்கிறார்.

புதுதில்லியின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது

இந்த நெடுஞ்சாலை திட்டங்களின் மூலம் டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு இடையேயான இணைப்பு மேம்படுவதோடு, பயண நேரமும் குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

## ஜென்மாஷ்டமி

**கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி** பக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் மக்களுக்கு தங்களது உளம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் போதனைகளை பின்பற்றி நமது சமூகத்தையும் தேசத்தையும் வலிமையாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று கூறியுள்ளார்.

பிரதமர் தமது வாழ்த்து செய்தியில் இந்நாள் நம்பிக்கை, மகிழ்ச்சி, உற்சாகத்தை அனைத்து மக்களின் வாழ்விலும் கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளார்.

தமிழகத்திலுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான் திருக்கோவில்களில் சிறப்பு பூஜைகள் இன்றுகாலை முதலே நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டம் ஸ்ரீ வேணுகோபால சுவாமி திருக்கோவிலில் கிருஷ்ணனை தங்கள் குழந்தையாக பாவித்து பெண்கள் இவ்விழாவை கொண்டாடினர்.

விழுப்புரம் மாவட்டம் மருதூர் ஸ்ரீ வேணுகோபால சுவாமி திருக்கோவிலில் உரியடி திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

மக்கள் தங்கள் இல்லங்களில் கிருஷ்ணர் பாதங்களை வரைந்தும், மலர்களால் அலங்கரித்தும் வெண்ணெய், அவல், பொரிகடலை உள்ளிட்டவைகளை படைத்தும் வழிபட்டு வருகின்றனர்.

கிருஷ்ணர் அவதரித்த உத்தர பிரதேச மாநிலம் மதுராவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயங்கள், வண்ண வண்ண ஒளி அலங்காரங்களுடன் ஒளிர்கின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இவ்விழாவில் பங்கேற்க மக்கள் அங்கு வருகை புரிந்துள்ளனர்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் வெற்றியை கொண்டாடும் வகையில், கிருஷ்ணர் ஆலயத்தில் சிந்தூர் திலகத்துடன் மக்கள் உற்சாகத்துடன் இவ்விழாவை கொண்டாடுகின்றனர்.

இன்று நள்ளிரவு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர் - அம்ரித் உதயான்

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் உதயான் தோட்டத்தில் புளுமேரியா தோட்டம், ஆலமர தோப்பு, சலசலக்கும் மெல்லிய நீரோடை ஆகியவற்றை பொதுமக்கள் பார்வைக்காக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று திறந்துவைத்தார்.

ஒலி ஒளி காட்சிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இத்தோட்டத்தை பொதுமக்கள் இன்றுமுதல் அடுத்த மாதம் 14-ம் தேதிவரை rashtrapathybawan.gov.in இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பார்வையிடலாம்.

அனைத்து திங்கட்கிழமைகளிலும் பராமரிப்பு பணிகளுக்காக இத்தோட்டம் மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**இல. கணேசன்**

மறைந்த நாகாலாந்து மாநில ஆளுநரும், பிஜேபி மூத்த தலைவருமான இல.கணேசனின் இறுதிச்சடங்கு, இன்றுமாலை சென்னையில் நடைபெறுகிறது.

மாலை 4 மணிக்கு அன்னாரது உடல், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ராணுவ வாகனத்தில், ஊர்வலமாக பெசன்ட் நகர் மின்மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவருடைய இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர் கடிதம்**

**இந்திய பொருட்கள் மீதான இறக்குமதி வரியை** அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தொழில்துறை பாதிக்கப்படும் என்பதை கருத்தில்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு இன்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் ஜவுளி, இயந்திரங்கள், தோல், கடல் பொருட்கள் மற்றும் ரசாயனம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சம்மந்தப்பட்ட அமைச்சகங்கள் தொழில்துறையினரை கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சவாலான சூழலை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும், மத்திய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழக அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** சேலத்தில் இன்று நடைபெறும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் பங்கேற்கிறார்.

தொடர்ந்து தர்மபுரியில் நாளை நடைபெறும் அரசு விழாவில் 512 கோடி ரூபாய் மதிப்பிலான, ஆயிரத்து 44 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், 70 ஆயிரத்து 427 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கவுள்ளார்.

❖❖❖❖❖❖

**சுற்றுலாத்துறை**

**தமிழக சுற்றுலாத்துறையின் சிறப்பான** செயல்பாடுகளால் கடந்த 4 ஆண்டுகளில் 129 கோடியே 28 லட்ச ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும் வகையில் கட்டமைப்புகளை மேம்படுத்தி சுற்றுலாக்கொள்கை வெளியிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் உல்லாடா, கோவை மாவட்டம் வேட்டைக்காரன்புதூர் சிவகங்கை மாவட்டம் கீழடி, நாமக்கல் மாவட்டம் மேல் கலிங்கப்பட்டி ஆகிய மாவட்டங்கள் மத்திய அரசின் சுற்றுலா கிராம விருதுகளை பெற்றுள்ளதாக அரசு சுட்டிக்காட்டியது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மதுரை சித்திரை விழா, கோடை விழாக்கள், சாரல்விழா, வல்வில்ஓரி திருவிழா உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**ஐ. பெரியசாமி**

**திண்டுக்கல்லில் தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்** திரு.ஐ.பெரியசாமிக்கு தொடர்புடைய நான்கு இடங்களில் அமலாக்கத் துறையினர் இன்று சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோல் சீலப்பாடி, வத்தலகுண்டு, கோவிந்தாபுரம், அசோக்நகர் உள்ளிட்ட இடங்கள் இதில் அடங்கும்

இந்த சோதனை ஒட்டி மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் இப்பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே அமைச்சர் வீட்டின் முன்பு திமுகவினர் தர்ணா போராட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖

**ஆடி கிருத்திகை**

**ஆடி கிருத்திகையை ஒட்டி திருத்தணி அருள்மிகு** சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் இன்று பக்தர்கள் அதிகரித்து காணப்படுவதால் அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர். திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருத்தணியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், பக்தர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

.. **வாய்ஸ்** ..

மலையடிவாரத்தில் உள்ள சரவண பொய்கையில் இன்றுமாலை தெப்போற்சவம் நடைபெறவுள்ளது.

ஆடிமாத கிருத்திகை தினத்தை ஒட்டி சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத கோவிலில் இன்று சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

❖❖❖❖❖❖

**வானிலை**

**சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு,** நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழைபெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**குற்றாலம்**

**மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும்** மழைக்காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து, சுற்றுலா பயணிகள் குளிக்க 2-வது நாளாக இன்றும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**துப்பாக்கி சுடுதல்**

**ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்பட்ட போட்டிகள்** கஜகஸ்தானில் இன்று தொடங்குகிறது.

28 நாடுகளை சேர்ந்த 734 துப்பாக்கி சுடும் வீரர்கள் பங்கேற்கும் இப்போட்டியில் மனுபாக்கர் தலைமையிலான 164 பேர் கொண்ட இந்தியா அணி களமிறங்குகிறது.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**அமெரிக்கா சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர்** இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரித்விக் போலிப்பள்ளி இணை - அமெரிக்காவின் **Vasil Kirkov,** நெதர்லாந்தின் **Stevens** இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை** முடிவடைந்தது.

❖❖❖❖❖❖